Deposition of Witness

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

ATHOOR

**STC.No. 356/2022**

**Deposition of PW.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகராஜன் | ஜாதி | : | |
| த/பெ | : | வெள்ளைய கவுண்டர் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கெண்டிச்சம் பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 65/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.08.2026.

(எதிரி ஆஜர்)

**Crl.M.P.No. 3009/2024 மனு அனுமதிக்கப்பட்டு, சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமமாக போலிசார் உங்களை எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எனக்கு காயம்பட்டு இருந்ததால் நான் மருத்துவமனையில் இருந்தேன். என் மகனை விசாரித்தார்கள். காயம் ஏற்பட்டதால் என்ன நடந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் காயம் ஏற்பட்டதற்கு பின்னிட்டு எனக்கு தெரியாது. எதிரியின் விபரம் போலிசார் சொல்லி தான் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். திண்டுக்கல்-செம்பட்டி ரோடு நேரான ரோடு என்றால் சரிதான். கோடாங்கிபட்டி ரோட்டில் இருந்து பைபாஸ் ரோட்டிற்கு திரும்பும் போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் கோடாங்கிபட்டி பிரிவில் திரும்பி 20 அடியில் திண்டுக்க்ல செல்லும் வழியில்

விபத்து ஏற்பட்டது. டிராக்டரின் நீளம் எவ்வளவு அடி என்றால் 30 அடி இருக்கும்.

கேணி மேட்டில் ஊன்றி மண் தூக்குவதற்கு பயன்படுத்தும் மரம் எவ்வளவு உயரம் இருக்கும் என்றால் 11 அடி இருக்கும். டிராக்டரில் என்ன பொருட்களை கொண்டு சென்றீர்கள் என்றால் போர் தூக்கும் உபகரணம் இருந்தது. கோடாங்கிபட்டி பிரிவில் நிழற்குடையும், இரண்டு புறமும் மரங்களும் உள்ளது என்றால் சரிதான். டிராக்டரில் மொத்தம் எத்தனை நபர்கள் சென்றீர்கள் என்றால் டிரைவருடன் சேர்த்து மொத்தம் 3 பேர் சென்றோம். டிராக்டரை ஓட்டி சென்ற நபர் தான் நேராக சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. உங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 356/2022**

**Deposition of PW.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவமுருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | ராமசாமி | தொழில் | : | விவசாய கூலி |
| கிராமம் | : | நடுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.08.2026.

(எதிரி ஆஜர்)

**Crl.M.P.No. 3009/2024 மனு அனுமதிக்கப்பட்டு, சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களுக்கு எத்தனை நாட்கள் கழித்து சுயநினைவு வந்தது என்றால் 6 மாதம் கழித்து சுயநினைவு வந்தது. போலிசார் என்ன விசாரித்தார்கள் என்றும், புகாரில் என்ன எழுதியுள்ளது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியின் பெயர் விபரம் போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor